செய்தி வெளியீடு எண்.132 நாள்.11.2.2011

**சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகளில் பயிற்றுநர் பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்**

கலை பண்பாட்டுத் துறையின் வாயிலாக, கலை வடிவங்களை பரப்பியும், கலைஞர்களின் கலை முயற்சிகளை ஊக்குவித்தும், அவர்களைப் போற்றியும், நம் தமிழ் பண்பாட்டு நெறிகளை எதிர்காலச் சந்ததியருக்கு கொண்டு செல்லவும், தொன்மைக் கலை மரபுகளையும், நாட்டுப்புறக் கலைகளையும், அனைத்து திக்குகளிலும் கொண்டு செல்லும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நாட்டுப்புறக் கலைகளில் ஈடுபட்டுள்ள நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் அளிப்பதற்காகவும், அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தவும், தமிழக அரசால் "தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்" தோற்றுவிக்கப்பட்டது. கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள், அரசு கவின்கலைக் கல்லூரிகள், அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் ஆகிய கலைக் கல்விப் பயிலகங்களும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு ஆகிய கலை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியன இயங்கி வருகின்றன.

கலை பண்பாட்டுத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதியளித்ததைத் தொடர்ந்து, 2006 ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – 23, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் – 76, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் – 05, கருணை அடிப்படையில் நியமனங்கள் – 10, ஒப்பந்த ஊதியத்திலிருந்து காலமுறை ஊதியம் – 05 மொத்தம்–119.

தற்போது சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகளில் பணிபுரிய 13 பயிற்றுநர்களுக்கு இன்று (11.2.2011) காலை புதிய தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார். இதுவரை கலை பண்பாட்டுத் துறையில் 132 பேருக்கு நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வின் போது, சுற்றுலா பண்பாட்டுத் துறை செயலாளர் திரு.சோ.க.ஜவஹர், கலை பண்பாட்டுத் துறை ஆணையர் திரு.ப.அ.மணி ஆகியோர் உடனிருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.